

விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் கூட்டம் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைக்கிணங்க மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவது, பட்டா அல்லாத பொது இடங்களில் உள்ள கழக கொடிக்கம்பங்களை உடனடியாக அகற்றுவது மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா. கற்பகம், மகளிர் பிரச்சார குழுச் செயலாளர் எம்.தேன்மொழி, மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், அப்துல் சலாம் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஓமந்தூரில் நடைபெற்ற கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் ஆலந்தூர் மலர்மன்னன்,ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில்

# அனைத்துக் கிராமங்களுக்கும் தூய குடிநீர் வழங்கிய முதல்வரைப் போற்றுகிறார்கள்!

## சட்டப்பேரவையில் – ஜி.வி.மார்க்கண்டேயன் பேச்சு!

**சென்னை, மார்ச் 22–**

***சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு விளாத்திகுளம் உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசுகையில் எங்கள் தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தூய குடிநீர் வழங்கிய முதல்வரை போற்றுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.***

***சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசியதாவது:–***

எதிர்வருகின்ற படை எதுவாக இருந்தாலும் அதை முறியடித்து, வெற்றிபெறுகிற ஆற்றல் மிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சிப்பாய்களை, உருவாக்குகிற எங்கள் தலைவரை வணங்கி, நீங்கள் கண்ணின் கடைப் பார்வையை எங்களுக்கு காட்டிவிட்டால் போதும். நாடாளுமன்றத்தில் நாகரிகமற்றவர்கள் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று சொன்னபோது, எங்கள் நாடாளுமன்ற குழுவினுடைய தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரையும் அழைத்து, ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நாங்கள் நாகரிகம் மிக்க தமிழ்க்குடிகள் என்பதை நிரூபணம் செய்வதற்காக, நாடாளுமன்றமே ஸ்தம்பிக்கக் கூடிய அளவுக்கு மத்திய கல்வித் துறையினுடைய அமைச்சர், ஒரு நூறு முறை மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னால், அது எங்கள் திராவிட இயக்கத்தினுடைய ஐந்தாம் தலைமுறை தலைவர், இந்த இந்தியாவை வழிநடத்துகிற தலைவர், தமிழின மக்களை கண்ணீர் வடியாமல் காப்பாற்றுகின்ற, காட்சிக்கு எளிய எங்கள் தலைவர், தமிழ்நாட்டை ஒப்பாரும், மிக்காரும் இல்லாத மாநிலமாக இந்த நிதிநிலை அறிக்கையில் உருவாக்கக்கூடிய அளவுக்கு சிறப்பு படைத்த என் தலைவரை வணங்குகிறேன்.

இங்கு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறை அமைச்சர், அனைத்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர் மாடத்திலிருக்கின்ற அத்தனை பேருக்கும் என்னுடைய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செல்லூர் ராஜூ, முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி, கிருஷ்ணமுரளி ஆகியோர் உரையாற்றியபோது, இந்த நிதி நிலை அறிக்கையில் எதுவுமே இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாட்டின் நிதி கையிருப்பைக் கணக்கிட, அந்த நாட்டினுடைய தங்கத்தின் அளவை வைத்து எவ்வளவு நிதி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், எங்கள் முதலமைச்சர் அவர்கள், தங்கத்தையே நிதியமைச்சராக நியமித்திருக்கிறார். அந்த நிதி பரிபாலனம் செய்கிற எங்களுடைய அமைச்சர் அவர்களின் பட்ஜெட்டை நான் துருவிப் பார்த்தேன், அலசிப் பார்த்தேன், தரித்துப் பார்த்தேன், பிரித்துப் பார்த்தேன். அனைத்தும் தங்கமாகவே குவிந்திருக்கின்றன. அனைத்தும் தங்கமாகவே குவிந்திருக்கின்றன. அவை பிரித்து எடுப்பதற்கு மணிகளாக இருக்கின்றனவே தவிர, ஒரு பதர்கூட கிடையாது. எந்த புதிய திட்டங்களும் செயல்படுத்தவில்லை என்று சொன்னார்கள்.

### பேரறிஞர் அண்ணா கேட்ட கேள்வி

பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் என்ன *quote* செய்தார்கள் என்று செல்லூர் ராஜூ அவர்கள் சொன்னார்கள். அண்ணா அவர்கள் *quote* செய்ததை மறுபடியும் நான் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நீங்கள் என்ன பட்ஜெட் போட்டிருக்கிறீர்கள்? பணக்காரர்களுக்கு ஒரு வரி போட்டிருக்கிறீர்கள்; ஏழைகளுக்கு ஒரு வரி போட்டிருக்கிறீர்கள். இது என்ன வரி கொடுமை?' என்று கேட்டார்கள்.

அதற்குப் பெரியவர், 'வரி என்பது அனைவருக்கும் ஒன்றுதான்; பணக்காரர்களுக்கு தனியே வரி விதிக்க முடியாது; ஏழைகளுக்குத் தனியே வரி விதிக்க முடியாது; எல்லோருக்கும் ஒரே வரிதான் விதிக்க முடியும்' என்று சொன்னார். அதற்கு, அண்ணா அவர்கள், 'நவரத்தினத்திற்கு வரி விதித்தால், அது பணக்காரருக்கான வரி; நவதானியத்திற்கு வரி விதித்தால் அது ஏழைகளுக்கான வரி. (மேசையைத் தட்டும் ஒலி) முந்திரிப் பருப்புக்கு வரி விதித்தால் அது



பணக்காரருக்கான வரி; மொச்சைக்கொட்டைக்கு வரி விதித்தால் அது ஏழைகளுக்கான வரி' என்று சொன்னார்கள்.

எங்களுடைய தங்கத் தலைவன், தமிழினத்தினுடைய தலைவன், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவன், தங்கம் தென்னரசு அவர்களை வைத்து நிதி பரிபாலனம் செய்திருக்கிறார்கள். யாருக்குமே வரி இல்லை; இந்த தமிழ்நாட்டில் ஏழைகளுக்கு வரி இல்லை. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று, ஒரு வருடத்தில் ஏறக்குறைய 1 இலட்சம் நபர்களுக்கு, ஒரு வீட்டிற்கு மூன்றரை இலட்சம் ரூபாய் நிதி கொடுக்கும் வகையில், 3,500 கோடி ரூபாய் நிதியை ஒரு மாநிலத்தில் ஒதுக்கியது இந்திய சரித்திரத்தில் இதுதான் முதல்முறை. (மேசையைத் தட்டும் ஒலி) தனியொருவனுக்கு உணவில்லையேல், ஜகத்தினை அழித்திடுவோம் என்று சொன்னார்கள். தனி மனிதன் ஒருவனுக்கு வீடு இல்லையென்றால்கூட இந்த ஜகம் இருக்கக்கூடாது என்று நினைக்கிற எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய *permanent asset*. இது செல்லூர் ராஜூ அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை.

### கிராமங்கள் தோறும் சாலைகள்!

அடுத்து, சாலைகள். கிராமங்கள்தோறும் செல்லுங்கள். வருடத்திற்கு 6,100 கிலோ மீட்டர் அளவிலான சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன. எந்த ஊர் மக்களும் பேருந்தில் சென்றால், முன்பெல்லாம் ஒரு மணி நேரத்தில் செல்ல வேண்டிய பேருந்து, ஒன்றரை மணி நேரத்தில் செல்லும். ஆனால், தற்போது ஒரு மணி நேரத்தில் செல்ல வேண்டிய பேருந்து, அரை மணி நேரத்தில் சென்று விடுகிறது. நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சித் துறை ஆகியவற்றின் கீழுள்ள அனைத்து சாலைகளும் மிகத் திறம்பட்ட சாலைகள்–*higher specification roads* ஆக உள்ளன. ஆனால், எங்கள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம், எங்கள் தொகுதியில் 650 கி.மீ. சாலைகள் உள்ளன; அதிலுள்ள ODR சாலைகளை MDR சாலைகளாக மாற்ற வேண்டும்; *State Highways* சாலைகள் மட்டும் 200 கி.மீ. அளவிற்கு உள்ளன என்று குறிப்பிட்டு நான் பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறேன். அப்போதுகூட, உறுப்பினர் செல்லூர் ராஜூ அவர்களுக்கும், எனக்கும் ஒரே நியதிதான் என்று சொல்லி சத்தியப் பிரமாணம் எடுத்தது போன்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரே நியதிதான்; *Rule of law--Indian Constitution*–ஐ ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்துகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தில் அனைவருக்கும் ஒரேவிதமான உரிமைகளைக் கொடுத்து, அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமமான முறையில் உயர்த்திக் கொடுக்க முடியும் என்று சொல்லி எங்களுடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த நாட்டில் எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் போதுமான அளவிற்கு சாலை வசதிகளையும்-- உங்கள் கட்சிக்காரர்களுக்கும், பொதுமக்களுக்கும், உங்கள் தொகுதியைச் சார்ந்தவருக்கும் ஒரு இலட்சம் வீடுகள் என்றால்,-- செல்லூர் ராஜூ அவர்களுடைய தொகுதிக்கு எத்தனை வீடுகளோ, கிருஷ்ணமுரளி அவர்கள் தொகுதிக்கு எத்தனை வீடுகளோ, KPM அண்ணன் தொகுதிக்கு எத்தனை வீடுகளோ, அத்தனை வீடுகள்தான் விளாத்திக்குளம் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்கும் கிடைத்திருக்கிறது.

### சென்னைக்கு ரூ.350 கோடியில் புதிய நீர்த்தேக்கம்!

ஒரு சமமான நீதியை-- குடிநீர் திட்டம் குறித்து அண்ணன் நேற்று பேசினார். KPM அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். எந்த *Infrastructure*–ம் இந்த *budget*–ல் கொடுக்கவில்லை என்று கூறினார். நான் கேட்கிறேன். சென்னை மிகப்பெரிய அளவில் மக்கள் வளர்ந்து கொண்டிருக்கிற நகரம். மிகப்பெரிய மக்கள்தொகை இருக்கிற நகரம். இந்த *Metropolitan city*–ல் வருங்கால சந்ததிகள் எப்படி குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, இதுவரை யாருமே செய்யாத ரூ.350 கோடிக்கு புதிய ஒரு நீர்த்தேக்கத்தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தாமிரபரணித் தண்ணீர் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் திருநெல்வேலியினுடைய பொறுப்பு அமைச்சராக இருக்கிறார்.

### சுத்தமான பொதிகைமலை தண்ணீர்!

திருநெல்வேலியில் பொறுப்பு அமைச்சராக இருக்கிறவர் தாமிரபரணியிலிருந்து எத்தனை *cusecs of water* வங்கக் கடலுக்குப் போகிறது, காவிரியிலிருந்து கொள்ளிடம் வரை எத்தனை *cusecs of water* வங்கக் கடலுக்குப் போகிறது, வைகையிலிருந்து எவ்வளவு தண்ணீர் இராமநாதபுரம் கண்மாயைத் தாண்டி கடலுக்குப் போகிறது என்பதையெல்லாம் பார்த்து மிகப்பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை தூத்துக்குடி மாவட்டத்தில்–ஏறக்குறைய 689 *habitation*–க்கு தண்ணீர் கொடுக்கிற இந்த ஆண்டின் புதிய திட்டம். 563 *habitation*–க்கு தண்ணீர் கொடுக்கிற--கடந்த ஆண்டு என் தொகுதி முழுவதும் அனைத்து கிராமங்களுக்கும் தூய குடிநீர் கொடுக்கிற திட்டத்தை நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். நிதி அமைச்சர் அவர்கள் நிதி பரிபாலனம் செய்து கொடுத்திருக்கிறார். நான் கேட்கிறேன், ஒரு கிராமத்தில் கடைகோடி இடத்தில் இருப்பவர்கள் குளத்துத் தண்ணீரைக் குடித்தவர்கள், ஆற்றுத் தண்ணீரைக் குடித்தவர்கள், அந்த ஊரில் *borewell*–ல் உப்புத் தண்ணீரும், சப்புத் தண்ணீரும், *saline water*–ம், *brackish water*–ம் குடித்தவர்களுக்கு சுத்தமான பொதிகை மலைத் தண்ணீரை இந்த ஆட்சி கொடுக்கிறது என்றால் இது *permanent asset* கிடையாதா? (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கு இருக்கக்கூடிய *drainage*, பாதாளச் சாக்கடை, *Metropolitan city*–ல் *train routes*-- பரவாயில்லை. *Budget*–ல் 'நீங்கள் நல்லபடியாகப் பேச வேண்டும்' என்று துணைப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார். அப்போது நான், படித்துக் கொண்டு வந்துவிடுவோம் என்று நேற்று நினைத்தேன். ஏற்கெனவே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் எதையுமே உற்று நோக்கிக் கேட்டுக் கொண்டே இருக்கிறார். அவர் முன்பு நன்றாகப் பேசிக் காட்டி விட வேண்டும் என்பதற்காக *budget* புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். *Budget* புத்தகத்தைப் படிக்கும்போது *night* ஒரு கனவு வந்தது. தொல்காப்பியப் பூங்கா வேண்டுமென்று கலைஞர் ஒரு கனவு கண்டார். அதை உருவாக்கிக் கொடுத்தார். *Steve Jobs* தன் தாயும் இல்லாமல், தந்தையும் இல்லாமல் வளர்ந்தவர். அவர் ஒரு கனவு கண்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய பாக்கெட்டிலும் *Apple iphone* இருக்கிறது. அப்துல்கலாம் அவர்கள் ஒரு கனவு கண்டார். அக்னி ஏவுகணையாகப் பறந்தது. *Elon Musk* கனவு கண்டார். அது *SpaceX* ஆக மாறி விண்ணில் *satellite*–ஐப் பறக்கவிட்டது. இன்று என் தலைவர் ஒரு நிஜம் கண்டார். அதைப்பற்றி நான் இரவு கனவு கண்டேன். சென்னைக்குப் பக்கத்தில் 2,000 ஏக்கர் *land acquire* செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு *Metro train, School education, Higher education, Super Speciality hospital, Flight*–லிருந்து *direct* ஆக *connectivity, Metro water*, பூங்கா, திரையரங்கம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு துணைக்கோள் நகரம் உருவாக்கப்படும் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எனக்கு வந்த கனவைப் போன்றுதான் ஒரு *ground* இடம் கொடுத்தால், நாங்கள் எல்லாம் அவ்வளவு பெரிய இனிமையான நகரத்திலிருந்து உங்களைப் பார்ப்பதற்கு வருவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கனவை நான் கண்டேன். இது புது திட்டம் இல்லையா? இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிற இந்த அரசை நீங்கள் பாராட்ட வேண்டாமா?

எங்களுடைய தலைவர், தமிழ்நாட்டினுடைய முதல்வர் அவர்கள், புதுமைப் பெண் திட்டத்தைக் கொடுத்துள்ளார். பள்ளிக் கல்வித் துறைக்கு 46,767 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார். புதுமைப் பெண் திட்டத்தில்--எங்கள் சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி வந்தார். மிகப்பெரிய அளவில் அந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சிக்கு வந்த பெண்கள் எல்லோரும் *CEO* என்ன சொல்வார், *DEO* என்ன சொல்வார் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்கள் 'முதலமைச்சர் வருகிறார், அனைவரும் அமைதியாக இருக்கவேண்டும்' என்று அறிவுறுத்தி கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார். முதலமைச்சர் அவர்கள் *stage*–ல் ஏறியவுடன், பிள்ளைகள் எல்லாம் *whistle*–ஐப் பறக்கவிடுகிறார்கள். ஒரு *real hero*–வாக என் தங்கத் தலைவனைப் பார்க்கிறார்கள். இந்த உலகிலேயே, ஓர் அரசாங்கம் ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்படுகிறது என்றால், அதனை வாக்காளர்கள்தான் தேர்வு செய்வார்கள். சுவிட்சர்லாந்தில் *Vote to recall* என்ற முறை உள்ளது. இந்திய நாட்டில் அந்தச் சட்டம் இல்லை. ஆனால், வாக்காளர்கள் திருப்தியடைந்தால்தான், ஆட்சி மீண்டும் திரும்பவரும். வாக்காளர்கள் என்போர் யார்? 18 வயதுக்குமேல் இருக்கிற *maturity* பெற்றவர்கள்.

### பெண்களுக்கான ஆட்சி இது!

இந்த ஆட்சி பெண்களுக்கு உரிய சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறது; பெண்களுக்கு உரிய பங்கீடுகளைக் கொடுத்திருக்கிறது; பெண்களுக்கு உரிய உயரத்தைக் கொடுத்திருக்கிறது; மிகச் சிறப்பான ஒரு கட்டமைப்பை இந்த ஆட்சி செய்திருக்கிறது. ஒரு *flow* ஆகப் பேசும்போது, வேளாண்மைத் துறையை விட்டுவிட்டேன். அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் என்ன அழகாக *performance* செய்துள்ளார் என்பதைப் பார்த்தீர்களா?

### சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். எருவிடுவதைவிட ஏர்விடுவது நல்லது என்று சொல்லியிருக்கிறார். மழை மறைவுப் பிரதேசத்தில் வாழ்கிற மானாவாரி நிலத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் 'காடெல்லாம் கரிசக்காடு பேரெல்லாம் பொம்மன் திம்மன்'. அவர்களை யார் பார்ப்பது என்றபோது, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார், அவர்களையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று.

மானாவாரி விவசாயிகளுக்கெல்லாம் இலவசமாக உழவுக்குப் பணம் கொடுத்திருக்கிறார். *Polyhouse, greenhouse*, பூச்சிக் கொல்லி மருந்துக்கு மானியம், உரங்களுக்கு மானியம், விதைகளுக்கு மானியம், *drip irrigation, tube irrigation, well irrigation, pipe irrigation, tank irrigation, canal irrigation* என அவ்வளவு கட்டமைப்புகளையும், சுமார் 65,000 கோடி ரூபாய்க்கு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் கொண்டுவந்துள்ளார். கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, வான்கோழி வளர்ப்பு ஆகியவற்றுடன் சுமார் 20 இலட்சம் *fish pond* உருவாக்கம்--, மீன் வளர்ப்பு குறித்து தாய்லாந்து நாட்டில் *YouTube*–ல் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்த *MRK* எப்படி பார்த்தார் என்று எனக்குத் தெரியவில்லை. எல்லா வயல்களிலும் 20 இலட்சம் டன் மீன் உற்பத்தியை செய்ய வேண்டுமென்று ஒரு மாபெரும் புரட்சிகரமான *Budget*–ஐ வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

கருத்துக் கேட்புக் கூட்டம்!

'காடு வெளஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலும் தானே மிச்சம்' என்று சொன்னீர்கள். இந்த நாட்டில் அதை பட்டுக்கோட்டை அன்று சொன்னார். அதே மாவட்டத்தில் பிறந்த அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் இன்றைக்குச் சொல்கிறார், 'காடு வைத்திருக்கிறவர்கள் எல்லாம் கனவான்கள் ஆகலாம்' என்று. எங்கள் தளபதியினுடைய ஆட்சியில் மும்மாரி மழை பொழிகிறது. *Insurance* கொடுக்கப்படுகிறது. அத்தனை வசதிகளையும் இங்கே விவசாயிகளுக்கு செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்குப் பதிலாக, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் நெல்லைக்கு வருகை புரிந்து கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தினார்கள். 44 நபர்கள் மொத்தம் 11 மாவட்டங்களிலிருந்து கருத்து சொன்னார்கள். அத்தனை கருத்துகளையும் எவ்வாறு *Budget*–ல் சேர்ப்பார்கள் என்று எண்ணியபோது, *teleprint* அடித்தது போல, வேளாண் பெருமக்கள் சொன்ன அனைத்து கருத்துகளையும் நிதிநிலை அறிக்கையிலும், வேளாண் நிதி நிலை அறிக்கையிலும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு சிறப்பாகச் சேர்த்து செயல்படுத்தியிருக்கிறது.

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தற்போது சபையில் இல்லை, 'அவரிடம் சென்றால் தண்ணீர் காட்டிவிடுவார், அதனால் நன்றாகப் படித்துவிட்டுச் செல்லுங்கள்' என்று சொன்னார்கள். வைப்பார் வடிநிலக் கோட்டத்தில் 3 *check dams* வேண்டுமென்று கேட்டேன். அவ்வாறு கேட்கச் செல்லும்போது, அவர் கேள்வி கேட்பார் என்று எண்ணி, வைப்பார் வடிநிலக் கோட்டம் பற்றிய விவரங்களை முழுமையாக அறிந்துகொண்டு சென்றேன். 16 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுக்கு *water spread area* உள்ளது; அந்த ஆறு 130 கிலோ மீட்டர் தொலைவிற்குப் பாய்கிறது; என் தொகுதியில் 56 கிலோ மீட்டருக்கு அந்த ஆறு பாய்கிறது; 28 *village panchayats* உள்ளன; 106 *hamlets* இருக்கின்றன; அங்கு எவ்வளவு *borewell* இருக்கிறது; எவ்வளவு தண்ணீர் *canal* மூலமாகப் பாய்கிறது என்று இவ்வளவு விவரங்களையும் பார்த்துத் தெரிந்துகொண்டு, அவரிடம் சென்று, *rain shadow region* ஆக இருப்பதால், 3 *check dams* வேண்டும் என்று மூன்று *budget*–லும் கோரியுள்ளேன் என்று சொன்னேன். அவர் அப்படியே பார்த்தார். தலைவரே, பொதுச் செயலாளர் அவர்களே, நீங்கள் இல்லாத அவையிலும் நான் பதிவு செய்கிறேன். இந்த ஆண்டு அவற்றை உருவாக்கிக் கொடுங்கள்.

எங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அனைத்தையும் கொடுத்துள்ளார். எங்கள் தங்கம் தயாரித்த நிதிநிலை அறிக்கையில் அனைத்தும் இருக்கிறது. எங்கள் முதலமைச்சர் அனைத்தையும் கொடுத்திருக்கிறார். இருந்தாலும், ஒன்று தேவையென்று நான் கருதுகிறேன். அது என்ன தேவை? இந்த நாட்டினை மீண்டும் கட்டுமானம் செய்வதற்கு, இந்த மக்கள் வளர்வதற்கு, இந்த மக்கள் உயர்வதற்கு, மானம் காப்பதற்கு, அடுத்த முறையும் எங்கள் தங்கத் தளபதியே தமிழ்நாட்டிற்கு முதலமைச்சராக வர வேண்டும் என்ற தேவையைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) வாய்ப்புக்கு நன்றி பாராட்டி நிறைவுசெய்கிறேன்.

இவ்வாறு ஜி.வி.மார்க்கண்டேயன் பேசினார்.



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அறிவாலயத்தில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.ஜெயராமன் கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் தங்கம், அழகு சுந்தரம், பஞ்சவர்ணம் , மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி வழிகாட்டலின் படிபோடி மேற்கு ஒன்றியம் மீனாட்சிபுரம் பேரூர் கழக செயலாளர் எம்.செல்வம் தலைமையில் போடி மீனாட்சிபுரம் தனியார் மண்டபத்தில் தகவல் தொழில் நுட்ப அணியின் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் பி.எஸ்.பி. மகேஸ்வரன் முன்னிலையில் சமூக வலைதளத்தில் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்களை ஆக்கபூர்வமாக செயல்படுவது குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் பேரூர் கழக நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தெருமுனைப் பிரச்சாரம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*தென்காசி, மார்ச் 22–*

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தொடர் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டங்கள் நாளை (23ஆம் தேதி) சங்கரன்கோவில் நகரம்,சிவகிரி பேரூர் ஆகிய பகுதிகளில் நடைபெறுகிறது. என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது. திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்



களின் பிறந்தநாளை முன்னிட்டு நாளை (23ஆம் தேதி-ஞாயிற்றுக்கிழமை) தெருமுனைப் பிரச்சாரமாக சங்கரன்கோவில் நகரப் பகுதியான திருவள்ளுவர் சாலை, காயிதே மில்லத் தெரு ஆகிய பகுதிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரமகுரு விஜயகுமார் ஆகியோர் பங்கேற்று பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

அதேபோல் சிவகிரி பேரூர் வடக்குத்தெரு முருகன் கோவில் முன்பு (சிவகிரி) அம்பேத்கார் நகர் (சிவகிரி) ஆகிய பகுதிகளில் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் செ.சு. செண்பகவிநாயகம் வாடியூர் மரியராஜ் ஆகியோர் பங்கேற்று தெருமுனை பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

ஆகவே அந்தந்த பகுதியில் நடைபெறும் தெருமுனை பிரச்சார நிகழ்வில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 30-.03.-2025 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணியளவில், உதகை, ஹெவேலோக் சாலையில் அமைந்துள்ள "ஓட்டல் மோனார்க்"கில், கழக துணைப் பொதுச்செயலாளரும் - மாணவர் அணி பொறுப்பாளருமாகிய ஆ.இராசா, எம்.பி., தலைமையில், திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளரும் - பொறுப்பு அமைச்சருமான மு.பெ.சாமிநாதன் முன்னிலையில், துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : மாணவர் அணியின் செயல்பாடுகள்
மேம்படுத்துதல் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.03.2025

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி.